بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 02/09/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 31**
*அன்னாரது காலத்தில் அரேபியாவுக்கு வெளியில் அநீதியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எதிரிகளுடன் நடைபெற்ற போர்களைப் பற்றிய குறிப்பு*

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த போர்களைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டு வந்தது. இது தொடர்பாக, ஹிஜ்ரீ 13 ஆம் ஆண்டில் நிகழ்ந்த டமாஸ்கஸ் வெற்றி குறித்து சில விபரத்தை எடுத்துரைக்கிறேன். இது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த கடைசி போர் ஆகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சிரியாவை நோக்கி பல்வேறு படைகளை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களை ஒரு படைக்கு அமீராக நியமித்து டமாஸ்கஸுக்கு அருகில் சிரியாவின் ஒரு பண்டைய, பிரசித்திப் பெற்ற பெரும் நகரமான ஹிம்ஸ் சென்றடையுமாறு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கட்டளைக்கிணங்க ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்கள் டமாஸ்கஸ் சென்றடைந்து மற்ற இஸ்லாமிய படைகளுடன் இணைந்து டமாஸ்கஸை முற்றுகையிட்டார்கள். இதில் 20 நாட்கள் கடந்து விட்டன. ஆனால், எந்த முடிவும் ஏற்படவில்லை. இந்தக் காலகட்டத்தில், ஹெராக்ளியஸ் அரசன் அஜ்னாதைன் எனுமிடத்தில் ரோமானியர்களின் பெரும் படையை ஒன்று திரட்டியிருப்பதாக முஸ்லிம்களுக்குத் தகவல் கிடைத்தது. இந்தத் தகவலைக் கேட்ட உடனேயே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கிழக்கு வாயிலில் இருந்து புறப்பட்டு, ஜாபியா வாயிலில் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களிடம் வந்தார்கள். நிலைமையைத் தெரிவித்தவாறு, நாம் டமாஸ்கஸ் முற்றுகையைக் கைவிட்டு விட்டு அஜ்னாதைனில் ரோமானிய படையை எதிர் கொள்ளலாம். அல்லாஹ் நமக்கு வெற்றியை வழங்கினால் பிறகு நாம் இங்கு திரும்பி வரலாம் என்ற தம் கருத்தை எடுத்து வைத்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள், என் கருத்து இதற்கு நேர் எதிரானது என்று கூறினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களின் கருத்துடன் உடன்பட்டார்கள். கோட்டை முற்றுகையைத்

தொடரச் செய்தார்கள். இவ்வாறு முற்றுகையிட ஆரம்பித்து **21** நாட்கள் கடந்து விட்டன. தாக்குதலைத் தீவிரப்படுத்துமாறு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் முஸ்லிம்களை ஊக்கப்படுத்தியவாறு கிழக்கு வாயிலில் தாம் தொடர்ச்சியாக தாக்குதல்களை ஆரம்பித்து விட்டார்கள். இவ்வாறு, போரில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, கோட்டை மதில் மேல் இருந்த ரோமானியர்கள் கை தட்டி ஆரவாரம் செய்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதைக் கண்டார்கள். முஸ்லிம்கள் வியப்புடன் இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். (அப்போது) ஒரு திசையில் ஒரு பெரும் புழுதிப்படலம் எழுவதை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கண்டார்கள். அதன் காரணமாக வானம் இருண்டு காணப்பட்டது. பகல் நேரத்திலும் இருள் சூழ்ந்து காணப்பட்டது. டமாஸ்கஸ் வாசிகளின் உதவிக்காக ஹெராக்ளியஸ் அரசனின் படை வந்து கொண்டிருப்பதை அன்னார் உடனே புரிந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் உடனடியாக ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களுக்கு நிலைமையைத் தெரிவித்தவாறு, அனைத்துப் படைகளையும் அழைத்துக் கொண்டு ஹெராக்ளியஸ் அரசனால் அனுப்பப்பட்ட படையை எதிர் கொள்ள செல்லலாம் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, இவ்விவகாரத்தில் உங்களின் ஆலோசனை என்ன என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள், இது பொருத்தமானதல்ல! ஏனென்றால் நாம் இந்த இடத்தை விட்டு விட்டால், கோட்டையில் இருப்பவர்கள் வெளியே வந்து நம்முடன் போர் செய்வார்கள். ரோமானியர்களின் இரு படைகளுக்கு நடுவே நாம் இக்கட்டில் மாட்டிக் கொள்வோம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மேற்கொண்டு ஆலோசனை கேட்ட போது ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்: துணிவுள்ள, வீரமுள்ள ஒருவரை நீங்கள் தேர்ந்தெடுத்து, எதிரியை எதிர்கொள்ள அவருடன் ஒரு (படைக்) குழுவை அனுப்பி வையுங்கள். ஆகவே, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸிரார் (ரலி) பின் அஸ்வர் அவர்களுக்கு **500** வீரர்களைக் கொண்ட படையைக் கொடுத்து ரோமானிய படையை எதிர்கொள்ள அனுப்பி வைத்தார்கள். இன்னோர் அறிவிப்பில் படையினரின் எண்ணிக்கை **5000** என்றும் கூறப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் வீரத்துடன் ரோமானிய படையின் மீது தொடர்ச்சியாக தாக்குதல் தொடுத்தார்கள். ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் மீது ரோமானிய படைத்தளபதியின் மகன் தாக்குதல் நடத்தினான். அன்னாரின் இடப்பக்க புஜத்தில் ஈட்டியைக் கொண்டு தாக்கினான். இதன் காரணமாக வேகமாக இரத்தம் வழிய ஆரம்பித்தது. ஆனால், ஒரு நொடிப்பொழுதுக்குப் பிறகு ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் அவன் நெஞ்சின் மீது ஈட்டியை எறிந்து அவனைக் கொன்று விட்டார்கள். ஈட்டி அவனுடைய நெஞ்சில் சிக்கிக் கொண்டது. மேலும், தன் முனை உடைந்து விட்டது. ஈட்டி, முனையின்றி

இருப்பதை ரோமானிய படை (வீரர்கள்) கண்ட போது, அன்னாரின் மீது பாய்ந்து அன்னாரை சிறைப் பிடித்தார்கள். இச்செய்தி ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களை சென்றடைந்த போது அவர்கள் மிகவும் கவலையடைந்தார்கள். ரோமானிய படையைக் குறித்து தோழர்களிடமிருந்து கேட்டறிந்த பிறகு, ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களிடம் ஆலோசனை செய்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்: டமாஸ்கஸ் முற்றுகைக்கு தகுந்த ஏற்பாடு செய்து விட்டு தாங்கள் தாக்குதல் நடத்தலாம்.

இதற்கிடையில், படைக்கு முன்னால் (முன்னால் சென்று கொண்டிருந்த) சிவப்பு குதிரையில் அமர்ந்திருந்த அடையாளம் தெரியாத ஒரு குதிரை வீரரைக் கண்டார்கள். அவர் கவசத்திற்கு மேலே உடையணிந்திருந்தார். அவருடைய நடவடிக்கை மற்றும் தோற்றத்திலிருந்து வீரமும், ஞானமும், போர்த்திறனும் வெளிப்பட்டன. இந்த குதிரை வீரர் யார் என்று எனக்குத் தெரிந்தால் நன்றாக இருக்குமே என ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் விருப்பப்பட்டார்கள். இஸ்லாமிய படை நிராகரிப்பாளர்களை நெருங்கியபோது அந்த குதிரை வீரர் அவர்கள் மீது எந்த அளவு வீரத்துடன் தாக்குதல் தொடுத்தார் என்றால், குருவிகளின் மீது பருந்து பாய்வதைப் போல் இருந்தது. அவருடைய ஒரு தாக்குதலே எதிரிப்படையில் அச்சுறுத்தலை ஏற்படுத்தி விட்டது. பிணங்களின் குவியலை உருவாகி விட்டது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் வலியுறுத்தி கேட்டதனால் அந்த வீரர், தாம் ஸிரார் அவர்களின் சகோதரி கவ்லா (ரலி) பின்த் அஸ்வர் என்றும், சகோதரர் சிறை பிடிக்கப்பட்டதை அறிந்ததும் நான் என்ன செய்தேனோ அதை தாங்கள் கண்டீர்கள் என்றும் கூறினார்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் முழுமையான தாக்குதலின் விளைவால், ரோமானியர்களின் பாதங்கள் தடுமாறிவிட்டன. அவர்களின் படை சிதறுண்டு போனது. வீர சாகசத்தை வெளிப்படுத்திய ஹஸ்ரத் ராஃபி (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், நீங்கள் வழி(த்தடங்)களை நன்கறிவீர்கள். உங்களுக்கு விருப்பமான வீரர்களை அழைத்துக் கொண்டு (எதிரிகள்) சென்றடைவதற்கு முன்பு ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்களை விடுவித்துக் கொண்டு வாருங்கள். உங்கள் இறைவனிடம் (அதற்கான) நற்கூலியைப் பெறுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் ராஃபி (ரலி) அவர்கள் புறப்படவிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் தாமும் உடன் செல்வதற்கு மன்றாடி அனுமதி பெற்று விட்டார்கள். அதன் பிறகு தாக்குதலின் விளைவால் ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்களுக்கு அல்லாஹ் விடுதலை வழங்கினான்.

இன்னொரு பக்கம், இஸ்லாமிய படை டமாஸ்கஸில் இருந்தது. கோட்டையின் முற்றுகை தொடர்ந்து கொண்டிருந்தது. அப்போது ஹஸ்ரத் அபாத் பின் சயீத் (ரலி) அவர்கள் புஸ்ராவிலிருந்து ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். ரோமானியர்களின் 90 ஆயிரம் வீரர்களைக்

கொண்ட படை அஜ்னாதைன் எனுமிடத்தில் ஒன்று கூடியிருப்பதாகத் தகவல் கொடுத்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களிடம் ஆலோசனை செய்தபோது அவர்கள் கூறினார்கள்: நம்முடைய படை சிரியா நாட்டில் பல்வேறு பகுதிகளில் பிரிந்து போய் உள்ளது. அவர்கள் அனைவருக்கும் கடிதம் எழுதி, அஜ்னாதைனில் வந்து நம்மை சந்திக்குபடி கூறிவிடுங்கள். இப்போது நாமும் டமாஸ்கஸ் கோட்டை முற்றுகையை கைவிட்டு விட்டு அஜ்னாதைனை நோக்கி புறப்படலாம்.

இங்கு முஸ்லிம்களுடைய படை புறப்பட்டது. அங்கு டமாஸ்கஸ் வாசிகள், ஹெறாக்லியஸுக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய, மிகச் சிறந்த வில்லாளியான பவுல் என்ற நபரிடத்தில் ஒன்று கூடினார்கள். அவன் அதற்கு முன் எந்தவொரு போரிலும் சஹாபிகளுக்கு முன் வரவில்லை. இவனைத் தம் தலைவராக ஆக்கிக் கொண்டனர். அவனுக்கு எல்லாவித பேராசைகளையும் ஊட்டி போருக்கு ஒப்புக்கொள்ள வைத்தனர். அவன் 6 ஆயிரம் குதிரைப் படை வீரர்களையும், 10 ஆயிரம் காலாட்படை வீரர்களையும் அழைத்துக் கொண்டு முஸ்லிம்களை எதிர்கொள்ள மிகவும் விரைவாகப் புறப்பட்டான். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் பவுல் உடன் போரில் மூழ்கியிருந்த நேரத்தில் பல்வேறு பகுதியில் இருந்து முஸ்லிம் படைகள் வந்தடைந்து விட்டன. அவை எந்த அளவு தாக்குதல் நடத்தினவென்றால், டமாஸ்கஸிலிருந்து வந்து தாக்குதல் நடத்திய ரோமானியர்களுக்குத் தமது இழிவும் அவமானமும் உறுதியாகி விட்டது. ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் தீப்பிளம்புகளைப் போன்று பவுலை நோக்கி முன்னேறினார்கள். அன்னாரை அவன் கண்டபோது, அடையாளம் கண்டு கொண்டான். அன்னாரைக் கண்டு நடுங்கி விட்டான். ஓட்டம் பிடித்தான். அன்னார் அவனை விரட்டிச் சென்று உயிருடன் சிறை பிடித்தார்கள். இந்தப் போரில் நிராகரிப்பாளர்களின் 6 ஆயிரம் நபர்களில் எஞ்சிப் போனால் 100 பேர் உயிருடன் தப்பி இருப்பார்கள். இன்னொரு புறம், பவுலின் சகோதரன் பீட்டர், காலாட்படையுடன் பெண்களை நோக்கி முன்னேறி வந்து, சில பெண்களை சிறை பிடித்து டமாஸ்கஸை நோக்கி திரும்பி விட்டான். ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் சிறை பிடிக்கப்பட்டதை எண்ணி கவலை கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அன்னாருக்கு ஆறுதல் வழங்கினார்கள். அத்துடன் இரண்டாயிரம் படை வீரர்களை தம்முடன் அழைத்துக் கொண்டு, பெண்களைப் பாதுகாப்பதற்காக மீதம் உள்ள அனைத்துப் படைகளையும் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களிடம் ஒப்படைத்து விட்டு சிறை பிடிக்கப்பட்ட பெண்களை தேடி புறப்பட்டார்கள்.

பெண்களை சிறை பிடித்த பகுதிக்குச் சென்றடைந்த போது அங்கு புழுதிப் படலம் எழுவதைக் கண்டார்கள். இங்கு சண்டை ஏன் நடைபெறுகிறது என்று அன்னார் வியப்புற்றார்கள். கேட்டறிந்த போது தெரிய வந்ததென்னவென்றால், பீட்டர் பெண்களை சிறைபிடித்த பிறகு, தன்

சகோதரன் பவுலுக்காக நதிக்கு அருகில் காத்திருந்தவாறு நின்று விட்டான். மேலும், அவர்கள் இப்பெண்களை தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டிருந்தனர். இப்பெண்களுள் பெரும்பாலார் வீரமுள்ளவர்களாகவும், அனுபவம் வாய்ந்த குதிரை வீரர்களாகவும், எல்லா வித போர்களையும் அறிந்தவர்களாகவும் இருந்தனர். இப்பெண்கள் தங்களுக்குள் ஒன்று சேர்ந்தனர். ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் இப்பெண்களுக்கு ஆவேசத்தையும், தன்மானத்தையும் ஊட்டியவாறு சுய மரியாதையை மேலோங்கச் செய்தார்கள். அத்துடன், கூடாரங்களின் தூண்களைக் கொண்டு சங்கிலிகளின் வளையங்களைப் போன்று (ஒன்றாக) எதிரிகளின் மீது தாக்குதல் தொடுத்தார்கள். இப்பெண்களின் துணிவு மற்றும் வீரத்தைக் கண்டு ரோமானியர்கள் திகைத்து விட்டனர். (இப்பெண்களின் மீது தாக்குதல் நடத்த) எதிரி மறுபடியும் ஆயத்தம் செய்தான். ஆனால், ஆரம்ப தாக்குதலுக்கு முன்னரே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் தலைமையில் முஸ்லிம்கள் அங்கு வந்தடைந்து விட்டனர். பீட்டர் முஸ்லிம்களைக் கண்ட போது பதற்றத்தில் ஓட ஆரம்பித்தான். ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் ஈட்டியின் முழு தாக்குதலால் அவனை சடலமாக ஆக்கி விட்டார்கள். இதே போன்று, பவுலும் தன் சகோதரனின் முடிவைக் கேட்டு சுய விருப்பத்தின் பேரில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் கைகளால் கொல்லப்பட்டான்.

அஜ்னாதைன் வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் டமாஸ்கஸ் நோக்கி புறப்படுமாறு இஸ்லாமிய படைக்குக் கட்டளையிட்டார்கள். அஜ்னாதைனில் ரோமானிய படை தோல்வியுற்ற செய்தி டமாஸ்கஸ் வாசிகளுக்கு முன்பே கிடைத்து விட்டது. ஆனால், (இப்போது) இஸ்லாமிய படை டமாஸ்கஸ் வரும் செய்தி கேட்டு அவர்கள் மிகவும் பயந்து விட்டார்கள். டமாஸ்கஸைச் சுற்றி வசிக்கக் கூடியவர்கள் ஓடிச் சென்று கோட்டைக்குள் அடைக்கலம் புகுந்து கொண்டனர். போதிய அளவில் தானியங்களையும் நுகர்வோர் பொருட்களையும் சேர்த்துக் கொண்டனர். அத்துடன், முற்றுகையிடுவோர் மீது தாக்குதல் நடத்துவதற்காக ஆயுதங்களையும், போர் தளவாடங்களையும் ஒன்று சேர்த்தனர். இஸ்லாமிய படை டமாஸ்கஸுக்கு அருகில் முகாமிட்டது. பிறகு, முன்னேறிச் சென்று கோட்டையை முற்றுகையிட்டது. டமாஸ்கஸின் தலைவர்களும் அறிவுடையோரும் தம்முடைய ஆளுநரான தாமஸிடம் சென்று - இவன் மாபெரும் ஹெர்குலிஸ் அரசனின் மருமகனாக இருந்தான் - ஹெராக்லியஸிடமிருந்து உதவி வேண்டவோ அல்லது முஸ்லிம்களுடன் சமாதானம் செய்து கொள்ளவோ வேண்டும் என ஆலோசனை கொடுத்தார்கள். ஆனால், அவன் ஆணவம் மற்றும் கர்வத்தை வெளிப்படுத்தியவாறு, தீவிரமாக முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுங்கள் என கட்டளையிட்டான். இந்தத் தாக்குதலினால் பல முஸ்லிம்கள் காயமுற்றார்கள்; ஷஹீத் ஆனார்கள். ஷஹீத் ஆனவர்களுள் ஹஸ்ரத் அபான் (ரலி) பின் சயீத் அவர்களும் ஒருவர் ஆவார்கள். (இவர்களுக்கு

புதிதாக திருமணமாகியிருந்தது) அவர்களின் மனைவி ஹஸ்ரத் உம்மு அபான் (ரலி) அவர்கள் மிகவும் திட மனப்பான்மையுடனும், மனஉறுதியுடனும் கடுமையாகப் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். தம்முடைய அம்புகளால் பல ரோமானியர்களை மரணக் குழியில் தள்ளினார்கள். அவ்வாறே, அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தபோது தாமஸின் கண்ணைக் குறிவைத்து ஓர் அம்பை எய்தார்கள். நிரந்தரமாக அவனது ஒரு கண்ணை குருடாக்கினார்கள். இதன் காரணமாக அவன் தன் படையுடன் கோட்டைக்குத் திரும்ப வேண்டிய கட்டாயத்திற்குள்ளானான்.

முஸ்லிம்கள் டமாஸ்கஸை கடுமையாக முற்றுகையிட்டிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால், தங்களுக்கு உதவி வந்தடையாது என டமாஸ்கஸ் வாசிகள் உறுதி கொண்டனர். ஆகவே, அவர்களிடத்தில் கோழைத்தனமும் பலவீனமும் உருவாகிவிட்டது. மேற்கொண்டு முயற்சி செய்வதை அவர்கள் விட்டு விட்டார்கள். முஸ்லிம்களின் உள்ளங்களில் அவர்களை அடிபணிய வைக்க வேண்டும் என்ற உணர்வு மேலோங்கியது. முற்றுகை நீண்டதாக ஆகிக் கொண்டே சென்றது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் டமாஸ்கஸில் நுழைய அவர்கள் மேற்கொண்ட திட்டம் என்னவென்றால், (கோட்டைச்) சுவரில் (ஏறுவதற்கும், மறுபுறம்) இறங்குவதற்கும் சில கயிறுகளை ஒன்று சேர்த்து அவற்றில் முடிச்சுக்களை இட்டு ஏணிகளைப் போன்று அவற்றை பயன்படுத்தினார்கள். இந்தத் திட்டத்தை மேற்கொண்டு இஸ்லாமிய படைகள் டமாஸ்கஸில் நுழைந்து விட்டன. நான்கு இஸ்லாமிய படைத் தளபதிகளும் நகரின் நடுவே ஒருவர் மற்றவரை சந்தித்துக் கொண்டனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் டமாஸ்கஸின் சில பகுதிகளை போரிட்டு வெற்றி பெற்றிருந்தாலும் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் சமாதான (ஒப்பந்தத்தை) ஏற்றுக் கொண்டதன் காரணமாக வெற்றி கொள்ளப்பட பகுதிகளிலும் சமாதான (ஒப்பந்த) நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

**இனிமேல் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்வின் மீதமுள்ள பிற அம்சங்கள் எடுத்துரைக்கப்படும் இன்ஷா அல்லாஹ்!**

*ஹுஸூர் அவர்கள், இறுதியில் தெற்கு பாலஸ்தீன் ஜமாஅத் தலைவரான மதிப்பிற்குரிய உமர் அபூ அர்கூப் சாஹிப், பாக்கிஸ்தானில் சிந்த் தர்பார்க்கரைச் சார்ந்தவரும், மிட்டீயின் முதல் அஹ்மதியுமான மதிப்பிற்குரிய ஷேக் நாஸிர் அஹ்மத் சாஹிப், முன்னாள் வக்ஃபே ஜதீதின் முஅல்லிம் ஆன மதிப்பிற்குரிய மலிக் சுல்தான் அஹ்மத் சாஹிப் மற்றும் பாக்கிஸ்தான் மண்டி பஹாவுத்தீன் மாவட்டம் சஅதுல்லாஹ்பூரைச் சார்ந்த மதிப்பிற்குரிய மஹ்பூப் அஹ்மத் ராஜீகீ சாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு, ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழ வைப்பதாகவும் அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ
وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ
ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**